

# இடம் பொருள் கலைஞர்

97

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் உடல் உறுப்பு தானத் திட்டம்!**



# உடல் உறுப்பு தானத் திட்டம்!

## உயிர் சிகிச்சையில் உயர் சிகிச்சை

தமிழ்நாடு பெரியார் மண்! பகுத்தறிவுப் பாதையில் நடைபோடும் மக்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம். அரசியல்போலவே, ஆட்சியிலும், நிர்வாகத்திலும் பகுத்தறிவு-அறிவியல் பாதை வழுவாமல், அதை ஊக்குவித்தவர்கள் பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும். அவர்களைத் தொடர்ந்து, நமது இன்றைய முதலமைச்சர் அவர்களும். அந்த வகையில், பகுத்தறிவு -அறிவியல் பார்வையில் கலைஞர் போட்ட பாதைதான் ‘உடல் உறுப்பு தானத் திட்டம். இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டுவது போல, முதன்முதலில் 2008-ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் அன்றைய முதலமைச்சர் கலைஞர்.

ஒருவர் வாழ்வதற்குத் தேவையான முக்கிய உறுப்பு செயலிழந்துவிடும் நிலையில், கொடையாக அளிக்கப்பட்ட மற்றொருவரின் உறுப்பைப் பொருத்தி, அதன்மூலம் புதிய வாழ்வைத் தரும் உயிர்நேயம்தான் உறுப்பு தானம்.

உடல் உறுப்பு தானத்தில் இரு வகைகள் உள்ளன. ஒன்று உயிருடன் இருக்கும் போது உடல் உறுப்புகளை தானம் செய்வது. இதில், பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உறுப்புகளை தானம் செய்யலாம். அதிலும் உயிருடன் இருக்கும்போது ஒருவர் ஒரு சிறுநீரகம், கல்லீரலின் ஒரு பகுதி, கணையத்தின் ஒரு பகுதி போன்றவற்றை மட்டுமே தானம் செய்ய முடியும்.

இரண்டாவதாக, இயற்கையாக இறந்தவரது குடும்பத்தினரின் அனுமதியுடன் கண்கள், இதய வால்வு, தோல், எலும்புகள் போன்ற உறுப்புகளைத் தானமாகப் பெறலாம். அதுபோல, மூளைச்சாவு அடைந்தவரிடமிருந்து குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்தால், இதயம், கல்லீரல், சிறுநீரகம், குடல், நுரையீரல், கண், சிறுகுடல், இதய வால்வு, தோல், இரத்த நாளம், எலும்புகள், ஆகிய முக்கிய உறுப்புகளைத் தானமாகப் பெற்று, தேவைப்படும் நபர்களுக்குப் பொருத்தலாம். ஒருவர் உடல் உறுப்பு தானம் செய்யும்போது குறைந்தபட்சமாக 8 பேரையும், அதிகபட்சமாக 75 பேரையும் காப்பாற்ற வாய்ப்புகள் இருப்பதாக, மருத்துவ அறிவியல் சொல்கிறது.

அந்த வகையில், மக்களின் பழைய மன நிலையை மாற்றி, இறந்த ஒருவரின் உறுப்புகளைத் தானமாக அளிப்பதன் மூலம் பல உயிர்களை வாழ வைக்க முடியும் என்கிற புரிதலை உருவாக்கியது, கலைஞர் கொண்டுவந்த இந்தத் திட்டம்.

### மருத்துவத் துறையில் மைல்கல்

மூளைச்சாவை அறிவிப்பது தொடர்பான சட்டம் 1994-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர், இறந்தவர்களின் உறுப்புகளைத் தானம் பெற்று, உறுப்பு மாற்றுச் சிகிச்சைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டன. அந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 2008-ஆம் ஆண்டில், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர்.



அன்றைய நிலையில், உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் பல முறைகேடுகள் நடைபெற்று வந்ததைத் தடுக்கும் விதமாக, அவற்றை அரசு முறைப்படுத்துவதற்காகவும் உறுப்பு தானத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

2008-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த ஹிதேந்திரன் என்கிற இளைஞர் சாலை விபத்தில் சிக்கி, மூளைச்சாவு அடைந்தார். அவரது உடல் உறுப்புகளைத் தானமாகத் தர அவரது பெற்றோர் முன் வந்தனர். அதையடுத்து, ஹிதேந்திரனின் இதயம் உள்ளிட்ட உறுப்புகள் தேவைப்பட்டவர்களுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டன. அந்த நிகழ்வு மக்களின் மனதில் பெரும் நெகிழ்வை ஏற்படுத்தியது. மகனை இழந்த துயரிலும் பெற்றோர் செய்த நற்செயலைப் பாராட்டும் விதமாக, அன்றைக்குத் துணை முதலமைச்சராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள், அந்தப் பெற்றோரை நேரில் சென்று பாராட்டினார்.

### முன்னோடித் திட்டம்

ஹிதேந்திரனின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட அடுத்த மாதத்திலேயே, தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானப் பிரிவைத் தொடங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளைச் சட்டரீதியாகச் செயல்படுத்துவது மற்றும் முறைப்படுத்துவது தொடர்பாக இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் முன்னோடித் திட்டமாக இது அமைந்தது. உடல் உறுப்பு தேவைப்படுவோருக்கான பதிவேட்டை உருவாக்கி, பதிவு மூப்பின் அடிப்படையில் உறுப்பு மாற்றுச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

**2008-ஆம் ஆண்டு தொடங்கி நடப்பாண்டு வரை 1,817 கொடையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட உடல் உறுப்புகள் 10,827 பேருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன.**

தமிழ்நாட்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆறு ஆண்டுகள் கழித்துத்தான் ஒன்றிய அரசு தேசிய அளவில் உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கான விதிகளை வகுக்க, உறுப்பு மற்றும் திசு மாற்று மையம் (*National Organ and Tissue Transplant Organisation*) என்ற அமைப்பை உருவாக்கியது.

### வழிகாட்டிய தமிழ்நாடு

திட்டம் தொடங்கப்பட்ட காலங்களில், இந்த சிசிச்சையைச் செய்வதற்கு தமிழ்நாட்டில் சில தனியார் மருத்துவமனைகள் மட்டுமே லைசென்ஸ் பெற்றிருந்தன. ஆனால், இப்போதோ 120 தனியார் மருத்துவமனைகளில் உறுப்பு மாற்றுச் சிகிச்சை அனுமதியைப் பெற்றிருக்கின்றனர். அதுபோல, 40 அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் வழியாகவும் இந்தச் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவும், வெளிமாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்து கொள்ளவும் வகை செய்தார் கலைஞர்.

இந்திய அளவில் ஒரு லட்சம் பேரில் 8 பேர் மட்டுமே உடல் உறுப்பு தானத்திற்கு முன் வருகின்றனர். ஆனால், தமிழ்நாட்டில் உறுப்புதான கொடையாளர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. 2008-ஆம் ஆண்டு தொடங்கி நடப்பாண்டு வரை 1,817 கொடையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட உடல் உறுப்புகள் 10,827 பேருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

உறுப்பு தேவைப்படும் நோயாளி குறித்து, மருத்துவமனை பதிவு செய்து, அவற்றின் பதிவு மூப்பு அடிப்படையில் உறுப்புகளை ஒதுக்குகிறது ஆணையம். இதன்மூலம், சட்ட விரோதமாக, முறைகேடுகள் இன்றி, உறுப்பு மாற்றுச் சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

### அரசு மரியாதை

2008- ஆம் ஆண்டு ஹிதேந்திரன் பெற்றோரைச் சந்தித்து ஆறுதல் சொன்ன அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு ஹிதேந்திரன் உயிரிழந்த செப்டம்பர் 23-ஆம் தேதியை ‘உடல் உறுப்பு தான நாள்’ என்றும், உறுப்பு தானம் செய்வோரின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்றும் அறிவித்து உறுப்புதானம் செய்பவர்களுக்கு உயரிய மரியாதை செய்தார்.

இந்திய அளவில் உறுப்பு தானத் திட்டத்தில் சிறப்பாகச் செயல்படும் மாநிலம் என, கடந்த ஆண்டு தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்த ஒன்றிய அரசு, அதற்கான விருதையும் வழங்கி கௌரவித்தது. அந்த விருதுக்கான விதையை விதைத்தவர் கலைஞர்.

**...வலம் வருவோம்**

## இடஒதுக்கீட்டில் தொடரும் அநீதி!

ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இதர பிற்படுத்தப்பட்டப் பிரிவினருக்கு 27 சதவிகிதமும், பட்டியல் பிரிவினருக்கு 15 சதவிகிதமும், பழங்குடிப் பிரிவினருக்கு 7.5சதவிகிதமும் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். எஞ்சிய 50.5 சதவிகிதம் இடங்கள் பொதுப்பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எம்.மில் 80 சதவிகிதம் ஆசிரியப் பணியிடங்கள் பொதுப்பிரிவினருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அனைத்திந்திய இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சங்கத்தின் தலைவர் கவுட் கிரண் குமார் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எழுப்பிய கேள்விகள் மூலம் இது தெரிய வந்துள்ளது.

குறிப்பாக, 13 ஐ.ஐ.எம்.-களில் 82.8% பொதுப்பிரிவினருக்கும், ஓ.பி.சி. பிரிவினருக்கு 9.6%, எஸ்.சி.பிரிவினருக்கு 5%, பழங்குடிப் பிரிவினருக்கு 1% மட்டுமே ஆசிரியப் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 21 ஐ.ஐ.டி.-க்களில் 80% பொதுப்பிரிவினருக்கும், ஓ.பி.சி. பிரிவினருக்கு 11.2%, எஸ்.சி. பிரிவினருக்கு 6%, பழங்குடி பிரிவினருக்கு 1.6% மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய இடங்கள் அனைத்தும் பொதுப்பிரிவில், அதுவும் குறிப்பாக, முன்னேறிய சமூகங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக இந்தூர் ஐ.ஐ.எம்.மில் 109 ஆசிரியர்களில் 106 பேர் முன்னேறிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள். நாட்டின் மக்கள்தொகையில் 70 சதவிகிதத்துக்கு மேல் உள்ள ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு உரிய இடஒதுக்கீடு வழங்காமல், 3 இடங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஜம்முவில் உள்ள ஐ.ஐ.எம்.மில் மட்டும்தான் ஓ.பி.சி. பிரிவினருக்கு 23%, எஸ்.சி. பிரிவினருக்கு 19%, பழங்குடியினர் பிரிவினருக்கு 5% இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

‘இடஒதுக்கீடே கூடாது’ என்று காலங்காலமாகக் கூறி வந்தவர்களுக்கு இ.டபிள்யூ.எஸ் (EWS) என்ற தனிப்பிரிவை உருவாக்கி, 10 சதவிகிதம் ஒதுக்கீட்டை மூன்றே நாட்களில் அமல்படுத்திய ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஆட்சிக்கு வந்து பத்தரை ஆண்டுகள் ஆகியும், உயர்கல்வி நிறுவனங்களில் ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்குத் தீர்வு காண முனையாதது ஏன்? நாட்டின் உயர் கல்வி நிறுவனங்களில் காலங்காலமாக நீடிக்கும் இந்தச் சமூக அநீதிக்கு இப்போதாவது முடிவு எட்டப்பட வேண்டுமென்பதே பொதுச்சமூகத்தின் வேண்டுகோள்.

## :ப்ளாஷ்பேக்



### புகைப்படத்தில் கையெழுத்து!



கே.ஜெ.சபரீசன்

என்னுடைய தந்தை ஜெயக்குமார் அவர்கள், இளம் வயது முதலே கழகப் பற்றுடன் செயல்பட்டவர், என்னையும் அதே உணர்வுடன் வளர்த்தார். தலைவர் தளபதி அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த போதெல்லாம், அவரைச் சந்திக்க அழைத்துச் செல்வார். அப்படி 2011-ஆம் ஆண்டு, ஒரு சந்திப்பில் அவர் சுவரோவியத்துடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படத்தைக் காட்டி, கையெழுத்துப் போட்டுத் தரும்படி கேட்டேன். ‘எத்தனை கையெழுத்து வேண்டும்...’ என்று சிரித்துக் கொண்டே கேட்டு, கையெழுத்தும் போட்டுக் கொடுத்தார்.

**– கே.ஜெ.சபரீசன், பேரூர் கழக அமைப்பாளர், அயோத்தியாப்பட்டணம், சேலம் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தமிழுக்கு இடமில்லையா?

1980-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் தேதி சென்னையில், தமிழ் வழிபாட்டு உரிமை மாநாட்டினை நடத்தியது திராவிடர் கழகம். ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று நாத்திகர்கள் கோருவது எப்படிப் பொருத்தமாகும் என அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த ‘விடுதலை’ இதழ், ‘கடவுள் உண்டா – இல்லையா என்பதல்ல; தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்த தமிழுக்கு, தமிழனுக்கு உரிமை இல்லையா என்பதுதான் முக்கியப் பிரச்சினை’ எனப் பதிலளித்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

680

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131